முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

மட்டம் 03 பரீட்சை – 2026 யூலை

(3801) நிதி அறிக்கையிடல்

(Financial Reporting)

2026-07-25
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  விடையெழுத : 03 மணித்தியாலங்கள்
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  (3) ***விடைகள்*** உங்களுக்கு வழங்கப்படும் ***விடைப்புத்தகத்தில்*** நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த ***அதே மொழியில்*** மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீங்கள் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை **மாத்திரம்** அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

<u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா 01

அறிக்கையிடும் ஒரு நிறுவனத்தின் நிதிச் செயலாற்றுகை பற்றிய தகவல்கள் அந்நிறுவனம் தனது பொருளாதார வளங்களில் இருந்து ஈட்டிய வருமானம் பற்றிப் பயனர்கள் புரிந்துகொள்ள உதவுகின்றன. மேலும், பயனுள்ள நிதித் தகவல்களின் தரம்சார் பண்புகள் (qualitative characteristics) நிதிக் கூற்றுக்களில் வழங்கப்படும் நிதித் தகவல்களுக்கும் பிற வழிகளில் வழங்கப்படும் நிதித் தகவல்களுக்கும் பொருந்தும்.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு வேலைச்சட்டகத்தின்படி, பயனுள்ள நிதித் தகவல்களின் இரண்டு (02) அடிப்படையான தரம்சார் பண்புகளை **விவரிக்க.** (03 புள்ளிகள்)

(b) நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பயன்படுத்தப்படும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு என்ற எடுகோள் (going concern assumption) பற்றி **விவரிக்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 02

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் – நிலைபேற்றுத்தன்மை வெளிப்படுத்துகை நியமம் 1 (SLFRS S1) ஆனது வெளிப்படைத்தன்மை, ஒப்பீட்டுத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காக நிலைபேற்றுத்தன்மை தொடர்பான நிதித் தகவல்களை வெளிப்படுத்துவதற்கான பொதுவான தேவைகளை அமைக்கிறது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) நிலைபேற்றுத்தன்மை அறிக்கையைப் (sustainability Report) பயன்படுத்துவதன் ஒரு நோக்கத்தைக் **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(b) SLFRS S1 இன் மூன்று (03) பொதுவான தேவைகளைப் (general requirements) **பட்டியலிடுக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 03

(a) கணக்கீட்டு மென்பொருள் என்பது தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு நிதிப் பரிவர்த்தனைகளைப் பதிவு செய்யவும், முகாமை செய்யவும், அறிக்கையிடவும் உதவுகின்ற ஒரு கருவி ஆகும்.

நீங்கள் செய்ய வேண்டியது :

ஒரு கணக்கீட்டு மென்பொருளின் இரண்டு (02) தொழிற்பாடுகளைப் (functions) **பட்டியலிடுக.**

(02 புள்ளிகள்)

(b) தன்னியக்கமானது (automation) செயன்முறைகளை நெறிப்படுத்தல், துல்லியத்தன்மையை மேம்படுத்தல் மற்றும் தந்திரோபாய தீர்மானமெடுத்தலை இயலச் செய்தல் ஆகியவற்றின் மூலம் கணக்கீட்டு நிலப்பரப்பை மாற்றியுள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியது :

கணக்கீடு மற்றும் அறிக்கையிடலில் தன்னியக்கத்தின் இரண்டு (02) நன்மைகளை **விவரிக்க.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 04

1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்படி, குறிப்பிட்ட வணிக நிறுவனங்கள் (SBEs) தமது நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இலங்கை கணக்கீட்டு நியமங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்படி, குறிப்பிட்ட வணிக நிறுவனங்களின் (Specified Business Enterprises) மூன்று (03) வகைகளை (categories) **அடையாளங் காண்க.**

(03 புள்ளிகள்)

(b) நிதி அறிக்கையிடலில் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுவதன் இரண்டு (02) முக்கியத்துவங்களைக் (importances) **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

பகுதி A முடிவு

பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

வினா 05

2026 மார்ச் 31 மற்றும் 2025 மார்ச் 31 இலான **வரையறுக்கப்பட்ட சண் (தனியார்) கம்பனியின்** நிதி நிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன:

வரையறுக்கப்பட்ட சண் (தனியார்) கம்பனி

நிதி நிலைக் கூற்றுக்கள்

(ரூ.'000)

மார்ச் 31 இல்	2026	2025
நடைமுறையல்லாச் சொத்துகள்:		
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	24,900	22,400
திரண்ட தேய்மானம்	(5,400)	(4,200)
முன்கொணரற் பெறுமதி	**19,500**	**18,200**
நடைமுறைச் சொத்துகள்:		
தொக்குகள்	6,800	6,100
வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்	6,400	6,000
காசும் காசுச் சமானங்களும்	2,100	1,900
	15,300	**14,000**
மொத்தச் சொத்துகள்	**34,800**	**32,200**
உரிமையாண்மையும் பரிப்புகளும்:		
உரிமையாண்மை:		
குறிப்பிடு மூலதனம்	25,000	25,000
கைக்கொள் இலாபம்	4,200	3,200
	29,200	**28,200**
நடைமுறையல்லாப் பரிப்புகள்:		
நீண்ட காலக் கடன்கள்	2,300	1,100
ஊழியர் நன்மைகள் (பணிக்கொடைக்கான ஏற்பாடு)	450	380
	2,750	**1,480**
நடைமுறைப் பரிப்புகள்:		
வியாபார சென்மதிகள்	1,900	1,620
செலுத்த வேண்டிய வருமான வரி	950	900
	2,850	**2,520**
மொத்த உரிமையாண்மையும் பரிப்புகளும்	**34,800**	**32,200**

கீழ்வரும் மேலதிக தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன:

(1) 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான இலாபம் ரூ. 1,200,000/-.

(2) 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவு ரூ. 450,000/-.

(3) ஆண்டின் காலப்பகுதியில் ரூ. 4,000,000/- கிரயமான ஒரு இயந்திரம் ரூ. 1,800,000/- இற்கு விற்கப்பட்டது. விற்பனைத் திகதியில் திரண்ட தேய்மானம் ரூ. 1,900,000/- ஆகும். மேலும், ஒரு புதிய இயந்திரம் ஆண்டின் காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டது.

(4) 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கடன்கள் மீதான வட்டிச் செலவினம் ரூ.175,000/- ஆகும். ஆண்டின் காலப்பகுதியில் அனைத்து வட்டிகளும் செலுத்தப்பட்டிருந்தன. கடன்கள் மீதான மூலதன மீள்கொடுப்பனவுகள் எதுவும் ஆண்டின் காலப்பகுதியில் செய்யப்படவில்லை என்பதுடன் ஆண்டின்போது ஒரு புதிய கடன் பெற்றுக் கொள்ளப்பட்டது.

(5) ஆண்டின்போது செய்யப்பட்ட பணிக்கொடைக் கொடுப்பனவுகள் ரூ. 250,000/- ஆக இருந்தது.

(6) 2026 மார்ச் 31 இல் சாதாரண பங்குதாரர்களுக்கு இடைக்காலப் பங்கிலாபங்கள் செலுத்தப்பட்டன.

நீங்கள் செய்ய வேண்டியது :

2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட சண் (தனியார்) கம்பனியின்** காசுப் பாய்வுகள் கூற்றை, <u>நேரில் முறையைப் பயன்படுத்தித்</u> **தயாரிக்க.** (10 புள்ளிகள்)

வினா 06

(A) **வரையறுக்கப்பட்ட டெக் சொலூசன் கம்பனி** ஒரு வாடிக்கையாளருடன் தனிப்பயனாக்கப்பட்ட மென்பொருள் தொகுப்பை வழங்கவும், மூன்று வருடங்கள் தொழிநுட்ப ஆதரவு வழங்கவும் என 2025 ஏப்ரல் 01 இல் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. மொத்த ஒப்பந்த விலை ரூ. 3,000,000/- ஆகும். இதனைத் தனித்தனியாக விற்பனை செய்தால், மென்பொருளின் விற்பனை விலை ரூ.2,700,000/- ஆக இருப்பதுடன் மாதமொன்றுக்கு ஆதரவுச் சேவை வழங்க ரூ.25,000/- அறவிடப்படும்.

நீங்கள் செய்ய வேண்டியது :

SLFRS 15 – வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்கள் மூலமான வருமானத்திற்கு இணங்க, மேற்படி பரிவர்த்தனைகளுக்கான 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மற்றும் 2027 மார்ச் 31 இல் முடிவடையும் ஆண்டிற்காக ஏற்பிசைவு செய்ய வேண்டிய வருமானத்தை **அடையாளங் காண்க.**

(05 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட சித்மா கம்பனி** ரூ. 60 மில்லியன் கிரயத்தில் ஒரு கட்டடத்தை நிருமாணித்துள்ளது. இந்நிருமாணம் 2025 யூலை 01 இல் ஆரம்பித்து, 2026 மார்ச் 31 இல் முடிவடைந்தது.

இக்கம்பனி பின்வரும் கடன்பெறுகைகளைச் (borrowings) மேற்கொண்டிருந்தது:

கடன் A : குறிப்பாக இந்த நிருமாணத்திற்காக 2025 ஏப்ரல் 01 இல் ஆண்டிற்கு 10% வட்டியில் ரூ. 20 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டது.

கடன் B : பொதுக் கடன்பெறுகைகளாக 2025 யூலை 01 இல் ஆண்டிற்கு 12% வட்டியில் ரூ. 50 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டது. நிருமாணத்திற்குச் செலவழிக்கப்பட்ட மீதித் தொகை இந்தக் கடனிலிருந்து பயன்படுத்தப்பட்டது.

பெறப்பட்ட கடன்கள் பயன்படுத்தப்படும் வரை அத்தகைய கடன்களை முதலீடு செய்ததன் மூலம் 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகச் சம்பாதிக்கப்பட்ட வட்டி வருமானம் ரூ. 400,000/- ஆக இருந்தது. மேற்படி இரண்டு கடன்களினதும் மூலதன மீள்கொடுப்பனவுகள் 2026 ஏப்ரல் 01 இலிருந்து ஆரம்பித்தன.

நீங்கள் செய்ய வேண்டியது :

LKAS 23 – கடன்பெறுகைக் கிரயத்தின்படி, கட்டடக் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்பட வேண்டிய கடன்பெறுகைக் கிரயத்தைக் **கணிப்பிடுக.**

(05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 07

(A) 2026 மார்ச் 31 இல் **வரையறுக்கப்பட்ட P கம்பனியின்** ஏடுகளில் இருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன:

(1) ஆதனம், பொறி மற்றும் உபகரண விவரங்கள் கீழ்வருமாறு: *(ரூ.'000)*

சொத்துகள்	கிரயம்	முன்கொணரற் பெறுமதி (தேய்மானம் கழிந்த சொத்தின் பெறுமதி) 2026 மார்ச் 31 இல்	வரி நோக்கத்தின்படி திரண்ட தேய்மானம் (மூலதன விடுதொகை) 2026 மார்ச் 31 இல்
காணி	120,000	120,000	-
மோட்டார் வாகனங்கள்	90,000	60,000	40,000

(2) 2026 மார்ச் 31 இல் பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூ. 12,000,000/-.

(3) நிறுவன வருமான வரி வீதம் 30%.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) 2026 மார்ச் 31 இல் தற்காலிக வேறுபாடுகளை **அடையாளங் காண்க.** (03 புள்ளிகள்)

(b) 2026 மார்ச் 31 இல் பிற்போடப்பட்ட வரிச் சொத்து/பரிப்பைக் **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(B) 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சான்ரா பீ.எல்.சீ.** இன் நிதிக் கூற்றுக்கள் 2026 யூன் 10 இல் விநியோகத்திற்காக அதிகாரமளிக்கப்பட்டன.

சான்ரா பீ.எல்.சீ. தொடர்பான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) கம்பனி ஒவ்வொரு ஆண்டும் ஊழியர்களுக்கு ரூ. 8 மில்லியன் மிகையூதியம் வழங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளது. அதற்கிணங்க 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபத்திலிருந்து ரூ. 8 மில்லியன் தொகையை வழங்குவதற்கு 2026 ஏப்ரல் 05 இல் பணிப்பாளர் சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இது நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(2) 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் களஞ்சிய முகாமையாளரால் இருப்புகளில் மோசடி ஒன்று நிகழ்த்தப்பட்டமையானது 2026 மே 10 இல் வெளிப்பட்டது. இந்த மோசடி காரணமாக ரூ. 7.5 மில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டதுடன் இந்த மோசடி காரணமாக இருப்பின் பெறுமதி அந்தத் தொகையால் அதிகரித்துக் குறிப்பிடப் பட்டிருந்தது.

நீங்கள் செய்ய வேண்டியது :

LKAS 10 - அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகளின்படி, **சான்ரா பீ.எல்.சீ.** இன் 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் மேற்படி ஒவ்வொரு நிகழ்வும் எவ்வாறு ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும் என்பதை **விவரிக்க.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி B முடிவு

பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

வினா 08

பின்வரும் பரீட்சை மீதி 2026 மார்ச் 31 இலான **ஓசியானிக் சீமெந்து பீ.எல்.சீ.** இன் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

ஓசியானிக் சீமெந்து பீ.எல்.சீ.

2026 மார்ச் 31 இலான பரீட்சை மீதி *(ரூ.'000)*

	வரவு	செலவு
குறிப்பிடு மூலதனம் (25,000,000 சாதாரண பங்குகள்)		250,000
2025 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம்		15,000
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்:		
காணியும் கட்டடமும் (காணிக் கிரயம் – ரூ. 80 மில்லியன்)	140,000	
இயந்திரம்	90,000	
மோட்டார் வாகனங்கள்	22,000	
2025 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம்:		
கட்டடங்கள்		14,000
இயந்திரம்		30,000
மோட்டார் வாகனங்கள்		2,000
சொத்துகள் விற்பனைக் கணக்கு		2,000
2026 மார்ச் 31 இல் தொக்கு - கிரயத்தில்	95,000	
வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள்	88,000	33,000
கையிலும் வங்கியிலும் உள்ள காசு	19,357	
2025 ஏப்ரல் 01 இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகை		6,000
செலுத்திய வருமான வரி	7,500	
விற்பனைக் கிரயம் / விற்பனைகள்	520,000	720,000
2025 ஏப்ரல் 01 இல் செலுத்த வேண்டிய வருமான வரி		6,500
பிற வருமானம்		3,500
முற்பண குத்தகைக் கொடுப்பனவுகள்	2,543	
செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம்	12,000	
நிருவாகச் செலவினங்கள்	51,600	
விநியோகச் செலவினங்கள்	28,000	
நிதி மற்றும் பிற செலவினங்கள்	6,000	
	1,082,000	**1,082,000**

பின்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2026 மார்ச் 31 இல் தொக்குகளின் நிகர தேறத்தக்க பெறுமதி (NRV) ரூ. 91,400,000/-.

(2) 2022 ஏப்ரல் 01 இல், ரூ. 20,000,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு இயந்திரம் 2026 மார்ச் 31 இல் ரூ. 2,000,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. இயந்திர விற்பனை மூலம் பெறப்பட்ட காசு, "சொத்துகள் விற்பனைக் கணக்கிற்கு" செலவுப் பதிவு செய்யப்பட்டிருந்தது. பெற்ற காசுக்கான பதிவைத் தவிர, வேறு எந்தப் பதிவுகளும் கணக்கேடுகளில் செய்யப்படவில்லை.

(3) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும். ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் பின்வருமாறு:

கட்டடங்கள்	:	40 ஆண்டுகள்
இயந்திரம்	:	04 ஆண்டுகள்
மோட்டார் வாகனங்கள்	:	05 ஆண்டுகள்

(4) 2025 ஏப்ரல் 01 இல், நிதிக் குத்தகை உடன்படிக்கையின் கீழ் ஒரு புதிய மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது. குத்தகைக்குப் பெறப்பட்ட மோட்டார் வாகனத்தின் சீர் மதிப்பு ரூ. 7 மில்லியனாக உள்ளதுடன் குத்தகைக் காலம் 5 ஆண்டுகளாக உள்ளது. வருடாந்தக் குத்தகைத் தவணைக் கட்டணம் ரூ. 1,543,000/- ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ஆந் திகதி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். உள்ளார்ந்த வட்டி வீதம் ஆண்டிற்கு 9% ஆகும். மோட்டார் வாகனத்தின் உரிமை, குத்தகைக் கால முடிவில் **ஓசியானிக் சீமெந்து பீ.எல்.சீ.** இற்கு மாற்றப்படும். உடனடிக் கொடுப்பனவான (down payment) ரூ. 1 மில்லியன், குத்தகைக் காலத் தொடக்கத்தில் செலுத்தப்பட்டதுடன், முதலாவது குத்தகைத் தவணைக் கட்டணம் ரூ. 1,543,000/- "முற்பண குத்தகைக் கொடுப்பனவுக் கணக்கின்" கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தவிர, இந்த விடயம் தொடர்பில் கணக்கேடுகளில் எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(5) கம்பனிக்கு ரூ. 1,500,000/- தர வேண்டியிருந்த வாடிக்கையாளர் ஒருவர் வக்கற்றவராக (bankrupt) 2026 மே 20 இல் அறிவிக்கப்பட்டார். தற்போது இந்தத் தொகை அறவிட முடியாததாகவும், அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்புச் செய்யப்பட வேண்டியிருப்பதும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. கம்பனி இந்தக் குறிப்பிட்ட வாடிக்கையாளர் தொடர்பில் கணக்கேடுகளில் குறிப்பான ஏற்பாடுகள் (specific provision) எதையும் செய்திருக்கவில்லை. மேலும், 2026 மார்ச் 31 இலான எஞ்சிய வியாபார வருமதிகள் மீதியில் 10% வியாபார வருமதிகளுக்கான விடுதொகையைப் பேணத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(6) வரிமதிப்பாண்டு 2024/25 இற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூ. 6,500,000/- ஆனது 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் செலுத்தப்பட்டது. இந்தச் செலுத்தப்பட்ட தொகையானது "செலுத்திய வருமானவரிக் கணக்கில்" தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வரிமதிப்பாண்டு 2025/26 இற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூ. 9,250,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது.

(7) 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் ரூ. 250,000/- செலுத்தப் படவில்லை என்பதுடன் கணக்கேடுகளிலும் கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(8) மேலும், 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வட்டி வருமானம் ரூ. 125,000/- ஆனது 2026 ஏப்ரல் 01 இல் கிடைக்கப் பெற்றது.

(9) கம்பனியின் பணிப்பாளர் சபை நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக அதனை 2026 மே 31 இல் அங்கீகரித்தது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

பிரசுரிப்பதற்குப் பொருத்தமான வடிவத்தில் ***ஓசியானிக் சீமெந்து பீ.எல்.சீ.*** இற்காகப் பின்வருவனவற்றைத் **தயாரிக்க:**

(a) 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் முற்றடக்க வருமானக் (முற்றடக்க வருமானக்) கூற்று. (10 புள்ளிகள்)

(b) 2026 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (08 புள்ளிகள்)

(c) 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று.

(03 புள்ளிகள்)

(d) 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு. (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

வினா 09

பின்வரும் தகவல்கள் 2026 மார்ச் 31 மற்றும் 2025 மார்ச் 31 ஆகிய திகதிகளில்/முடிவடைந்த ஆண்டிற்கான **மூன் பீ.எல்.சீ.** இன் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

(ரூ.'000)

மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது	2026	2025
விற்பனைகள்	1,000,000	900,000
விற்பனைக் கிரயம்	(600,000)	(540,000)
மொத்த இலாபம்	**400,000**	**360,000**
வட்டிச் செலவினம்	(12,000)	(20,000)
வருமான வரி	(8,000)	(5,000)
வரிக்குப் பின்னரான நிகர இலாபம்	**125,000**	**110,000**
மார்ச் 31 இல்	**2026**	**2025**
தொக்கு	150,000	120,000
வியாபார வருமதிகள்	200,000	180,000
காசும் காசுச் சமானங்களும்	50,000	40,000
பிற நடைமுறைச் சொத்துகள்	25,000	20,000
வியாபார சென்மதிகள்	100,000	90,000
குறுங் காலக் கடன் பெறுகைகள்	75,000	60,000
பிற நடைமுறைப் பரிப்புகள்	25,000	20,000

அனைத்து விற்பனைகளும் கொள்வனவுகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) 2026 மார்ச் 31 இல்/ முடிவடைந்த ஆண்டிற்கான மேற்படி தகவல்களின் அடிப்படையில் பின்வரும் விகிதங்களைக் **கணிக்க:**

(i) நடப்பு விகிதம்

(ii) மொத்த இலாப விகிதம்

(iii) நிகர இலாப விகிதம்

(iv) தொக்கு இருப்புக் காலம்

(v) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் (05 புள்ளிகள்)

(b) **மூன் பீ.எல்.சீ.** இயங்குகின்ற துறையின் தொழிற்றுறைச் சராசரி விகிதங்கள் பின்வருமாறு:

விகிதம்	தொழிற்றுறைச் சராசரி
நடப்பு விகிதம்	1.80
மொத்த இலாப விகிதம்	35%
நிகர இலாப விகிதம்	15%
தொக்கு இருப்புக் காலம்	75 நாட்கள்
கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்	60 நாட்கள்

மூன் பீ.எல்.சீ. இன் மேற்படி விகிதங்களை தொழிற்றுறைச் சராசரிகளுடன் ஒப்பிடுகின்ற ஒரு பொழிப்பு அறிக்கையைத் **தயாரித்து,** மாறுபாடுகளுக்குச் சாத்தியமான காரணங்களையும் விவரிக்க.

(05 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 10

கலக்ஸி பீ.எல்.சீ. 2025 ஏப்ரல் 01 இல் **ஸ்டார் பீ.எல்.சீ.** இன் சாதாரண பங்கு மூலதனத்தின் 80% ஐ ரூ.90 மில்லியனுக்குக் கையகப்படுத்தியது.

2026 மார்ச் 31 இலான **கலக்ஸி பீ.எல்.சீ.** மற்றும் **ஸ்டார் பீ.எல்.சீ.** இன் நிதி நிலைக் கூற்றுகள் பின்வருமாறு:

நிதி நிலைக் கூற்றுகள் *(ரூ.'000)*

2026 மார்ச் 31 இல்	கலக்ஸி பீ.எல்.சீ.	ஸ்டார் பீ.எல்.சீ.
நடைமுறையல்லாச் சொத்துகள்:		
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில்	120,000	80,000
ஸ்டார் பீ.எல்.சீ. இல் முதலீடு	90,000	-
நடைமுறைச் சொத்துகள்:		
தொக்குகள்	18,000	22,000
வியாபார வருமதிகள்	24,000	14,000
கலக்ஸி பீ.எல்.சீ. இடமிருந்து பெற வேண்டிய தொகை	-	5,000
காசும் காசுச் சமானங்களும்	18,500	2,500
	60,500	43,500
மொத்தச் சொத்துகள்	**270,500**	**123,500**
உரிமையாண்மையும் பரிப்புகளும்:		
உரிமையாண்மை:		
குறிப்பிடு மூலதனம்	150,000	60,000
கைக்கொள் இலாபம்	30,000	12,000
மொத்த உரிமையாண்மை	**180,000**	**72,000**
நடைமுறையல்லாப் பரிப்புகள்:		
நீண்ட காலக் கடன்	46,000	33,500
நடைமுறைப் பரிப்புகள்:		
வியாபார சென்மதிகள்	35,000	17,000
ஸ்டார் பீ.எல்.சீ. இற்கு செலுத்த வேண்டிய தொகை	3,000	-
செலுத்த வேண்டிய வருமான வரி	6,500	1,000
	44,500	18,000
மொத்த உரிமையாண்மையும் பரிப்புகளும்	**270,500**	**123,500**

பின்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) கையகப்படுத்தல் திகதியில், **ஸ்டார் பீ.எல்.சீ.** இன் காணி தவிர்ந்த நிகர சொத்துக்களின் புத்தகப் பெறுமதியானது சீர் மதிப்பைப் பிரதிபலிக்கிறது. அந்தத் திகதியில், காணியின் சீர் மதிப்பும் காணியின் முன்கொணரற் பெறுமதியும் (புத்தகப் பெறுமதி) முறையே ரூ. 75 மில்லியனாகவும் ரூ. 68 மில்லியனாகவும் இருந்தன.

(2) கையகப்படுத்தல் திகதியில் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் (NCI) சீர் மதிப்பு ரூ. 18 மில்லியனாக இருந்தது. கையகப்படுத்தல் திகதியில், **ஸ்டார் பீ.எல்.சீ.** இன் கைக்கொள் இலாபம் ரூ.10 மில்லியனாக இருந்தது.

(3) 2026 மார்ச் 21 இல், **ஸ்டார் பீ.எல்.சீ.** ரூ. 2 மில்லியன் பெறுமதியான பொருள்களை **கலக்ஸி பீ.எல்.சீ.** இற்கு விற்பனை செய்தது. **ஸ்டார் பீ.எல்.சீ.** கிரயத்தில் 25% இலாபத்தைப் பேணுகிறது. 2026 மார்ச் 31 இல், **கலக்ஸி பீ.எல்.சீ.** இந்த இருப்பைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதுடன் "**கலக்ஸி பீ.எல்.சீ.** இடமிருந்து பெற வேண்டிய தொகை" மற்றும் "**ஸ்டார் பீ.எல்.சீ.** இற்குச் செலுத்த வேண்டிய தொகை" ஆகியவற்றுக்கிடையிலான முரண்பாடு இந்த கால வேறுபாட்டைப் (timing difference) பிரதிபலிக்கின்றன.

(4) சேத இழப்புச் சோதனை 2026 மார்ச் 31 இல் மேற்கொள்ளப்பட்டதுடன், அச்சோதனையில் **ஸ்டார் பீ.எல்.சீ.** இன் கையகப்படுத்தல் மீதான நன்மதிப்பு 7 மில்லியனால் சேத இழப்பு அடைந்திருந்தமை வெளிப்பட்டது.

(5) **கலக்ஸி பீ.எல்.சீ.** ஆல் ரூ.10 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட காணியொன்று 2026 மார்ச் 31 இல் **ஸ்டார் பீ.எல்.சீ.** இற்கு ரூ.15 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) **ஸ்டார் பீ.எல்.சீ.** இன் கையகப்படுத்தலினால் எழுகின்ற நன்மதிப்பைக் (goodwill) **கணிப்பிடுக.**

(04 புள்ளிகள்)

(b) 2026 மார்ச் 31 இலான ஒன்றித்த நிதி நிலைக் கூற்றைத் **தயாரிக்க.** (11 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

பகுதி C முடிவு

செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

மட்டம்	செயல் வினைச்சொல்	வரைவிலக்கணம்	மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள்
நினைவிற் கொள்ளல் உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக் கருக்கள், அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல்	அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify)	யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல்	தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல்
	வரையறுக்க (Define)	ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து	ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல்
	ஏற்பிசைவு செய்க (Recognize)	முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு	முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல்
	குறிப்பிடுக/ கூறுக (State)	தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு	பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல்
	பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List)	பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர்	பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல்
	பதிவு செய்க (Record)	ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல).	தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல்
விளங்கிக் கொள்ளல் தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல்	கட்டியெழுப்புக (Construct)	கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல்	வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல்
	வேறுபடுத்துக (Differentiate)	இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல்	எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல்
	கலந்துரையாடுக / ஆராய்க (Discuss)	ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல்	பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல்
	விவரிக்க (Explain)	எதையாவது பெரியளவில் விரிவாக தெளிவுபடுத்தல்	தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல்
	எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க (Illustrate)	ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல்	பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல்
	உட்பொருளை விளக்குக (Interpret)	தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல்	உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல்
	விளக்குக (Describe)	ஏதாவதொன்றின் விரிவான விளக்கம்	கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல்
	பொழிப்பாக்குக (Summarise)	பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று	பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல்
பிரயோகித்தல் கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது..	பிரயோகிக்க (Apply)	ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல்	ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல்
	கணிக்க/ கணிப்பீடு செய்க (calculate)	கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல்	ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல்
	தீர்மானிக்க (Determine)	ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல்	கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிபு செய்தல்
	செயல் விளக்கமளிக்க (Demonstrate)	ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல்	கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல்
	தயாரிக்க (Prepare)	பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல்	ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல்
	பயன்படுத்துக (Use)	ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல்	தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல்
	முன்வைக்க (Present)	தகவல்களை பயனுறுதிமிக்க வகையில் பகிர்தல்	பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல்
பகுப்பாய்வு தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல்	பகுப்பாய்வு செய்க (Analyse)	ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல்	சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல்
	ஒப்பிடுக (Compare)	ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல்	பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல்
	பிரித்தறிக (Distinguish)	தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல்	பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல்
	பரீட்சிக்க / சோதிக்க (Examine)	ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல்	ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல்
	கோடிட்டுக் காட்டுக (Outline)	பிரதான விடயங்களின் பொழிப்பு	பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல்
	நடத்துக (Conduct)	ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல்	ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல்
	அறிக்கையிடுக (Report)	கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு	பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல்
மதிப்பீடு தேர்வு நிபந்தனை அல்லது நியமங்களின் அடிப்படை யில் யோசனைகள் அல்லது பொருள்களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல்	ஆலோசனை வழங்குக (Advise)	யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல்	பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல்
	மதிப்பீடு செய்க (Evaluate)	பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு	தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்பை மதிப்பிடுதல்
	அமைக்குக (Formulate)	ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி	நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல்
	பரிந்துரை செய்க (Recommend)	பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல்	தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல்
உருவாக்குதல் ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல்	உருவாக்குக (Create)	புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல்	அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல்
	மதிப்பிடுக (Assess)	தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல்	கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல்
	விருத்தி செய்க (Develop)	ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக் கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம்	காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல்
	முன்மொழிக (Propose)	கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல்	ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல்
	இணைப்பாக்கம் செய்க (Synthesis)	ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல்	பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல்
	வடிவமைக்குக (Design)	ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல்	ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல்
	தொகுக்குக (Compile)	பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல்	சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல்